**10.03.2026**

அ.வ.எண். **31/2023**

<u>பி.சா.**1** அண்ணாதுரை, வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**1**. தாவாசொத்தின் சர்வெ எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது அக்கா **1**ம் பிரதிவாதி மற்றும் மாமா **2**ம் பிரதிவாதி அவர்கள் எங்குள்ளார்கள் என்றால் செய்யூர் கிராமத்தில் உள்ளார்கள். செய்யூர் கிராமத்திற்கும் தாவாசொத்திற்கும் **5** கிலோ மீட்டர் தூரம் இருக்குமென்றால் **3** கிலோ மீட்டர் இருக்கும். எனக்கு நிரந்தர முகவரி வெல்லாரி கிராமம் ஆகும். **2**ம் பிரதிவாதி குபேந்திரன் அவர்களை நான் விசாரணை செய்ய முடியுமா என்றால் அவருக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை. **2**ம் பிரதிவாதிக்கு சம்பந்தம் இல்லை என்று எப்படி கூறுகிறேன் என்றால் வாதி எதற்காக **2**ம் பிரதிவாதியை சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியாது.

**2**. தாவாசொத்தில் வாதி வீடு கட்டி வசித்து வருகிற விவரம் எனக்கு எத்தனை வருடத்திற்கு முன்பு தெரியும் என்றால் தாவாசொத்தில் தற்போது எந்த வீடும் இல்லை, இதற்கு முன்பு ஓலை குடிசை வீடு இருந்தது அது தற்போது இடிந்துவிட்டது, வாதி வேறொரு இடத்தில் வீடு கட்டியுள்ளார். மேற்சொன்ன விவரங்களை எனது பிரமணாவாக்குமூலம் மற்றும் பதிலுரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சென்னையில் சுமார் **25** வருடம் தங்கியிருந்தேன், குடும்ப உறுப்பினர்கள் கிராமத்தில்தான்

வசித்து வந்தனர். எனது அம்மா, மனைவி, மகன் மற்றும் மகள் கிராமத்தில் வசித்து வந்தனர். தற்போது கிராமத்தில்தான் வசித்து வருகிறோம். எனது அம்மா இறந்தபிறகு செய்யூரில் வாடகைக்கு தங்கியிருந்தோம். எத்தனை வருடம் செய்யூரில் வசித்து வந்தோம் என்றால் **1 1/2** வருடம் இருந்தோம், அதன்பின்பு வெள்ளாரை கிராமத்திற்கு வந்துவிட்டோம்.

**3**. வெள்ளாரை கிராமத்தில் வசித்து வந்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நிரந்தரமாக சென்னையில் தான் வசித்து வந்தேன், ஆனால் தாவாசொத்தில் அத்துமீறி நுழைந்ததால்தான் வாதி செய்யூர் காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. ( சாட்சி தானாக முன் வந்து தான் வீடு கட்டும்போது வாதியின் வீட்டில் உள்ள மரம் தனது இடத்தில் சாய்ந்ததால் பிரச்சனை ஏற்பட்டு வாதியும் பிரதிவாதியும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்று கூறுகிறார், மேலும் நான் சென்னையில் நிரந்தரமாக வசிக்கவில்லை என்றும் தாவாசொத்திற்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று கூறுகிறார் ).

**4**. எனது பிரமாணவாக்குமூலம் மற்றும் பதிலரையிலும் மரத்தை வெட்டுவது சம்பந்தமாக எங்களுக்கு பிரச்சனை ஏற்பட்டது என்ற விவரத்தை நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. தாவாசொத்தில் நான் அத்து மீறி நுழைந்து மரத்தை வெட்டியதால்தான் வாதி எங்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன

புகாரின் அடிப்படையில் காவல்நிலையத்தில் விசாரணைக்கு அழைத்தார்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து வாதி எழுதி கொடுத்தார். மேற்சொன்ன எனது பிரமாணவாக்குமூலம் மற்றும் பதிலரையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

**5**. தாவாசொத்திற்கு அருகில் உள்ள நான் உரிமை கோரும் இடத்திற்கு பட்டா மற்றும் வருவாய் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த இடத்திற்கு கூட்டு பட்டா எனது அண்ணியின் பெயரில் உள்ளது. கூட்டு பட்டா உள்ள நபரை நான் விசாரிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் இல்லை. எனது அண்ணி லோகநாயகி பெயரில் கூட்டு பட்டா கிடையாது, அவ்வாறு இருந்திருந்தால் லோகநாயகியை விசாரணை செய்ய தயாராக இருந்திருப்பேன், எனவே நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**6**. தாவாசொத்து மற்றும் அதன் சுற்றியுள்ள சொத்துகள் எந்த வகைப்பாட்டை சேர்ந்த நிலம் என்றால் நத்தம் புறம்போக்கு மற்றும் மேய்க்கால் புறம்போக்கு நிலம் ஆகும். எனது தரப்பில் நான் தான் வாதி மீது புகார் கொடுத்தேன். மேற்சொன்ன புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நான் எந்தவிதமான புகாரை அளிக்கவில்லை, காவல்நிலைத்தில் என்னை எச்சரிக்கை செய்தார்கள் அதையும் மீறி ஆள்பலம் மற்றும் பணபலம் மூலம் வாதிகளின் நிலத்தை தொந்தரவு செய்து வந்தேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடி கொள்ளுங்கள் என்று சொன்னதன்

அடிப்படையில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகும் நான் நீதிமன்ற சம்மனை பெற்ற பிறகும் தாவாசொத்திற்கு சென்று வாதியிடம் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. தாவாசொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் தாவாசொத்து அருகில் கொட்டகை போட்டு வாதிக்கு தொந்தரவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

7. தாவாசொத்திற்கு அருகில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு சுமார் 15 முதல் 20 வருடத்திற்கு முன்பு பெற்றேன். அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு நிலுவையில் இருக்கும்போது பி.சா.ஆ.3 ஆவணம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணம் வேறு வேறு நபர்கள் பெயரில் உள்ளது என்றால் எனது அம்மா, அப்பா, மனைவி பெயரில் வீட்டு வரி ரசீது ஏற்பட்டுள்ளது. பி.சா.ஆ.1ல் 2015-2016 ஆண்டிற்கான வீட்டு வரி ரசீது எனது மனைவி பெயரில் கட்டியுள்ளது என்றால் வீட்டில் உள்ள நபர்களின் பெயரில் தான் வீட்டு வரி ரசீது ஏற்பட்டுள்ளது.

8. பி.சா.ஆ.1 ஆவணம் வீட்டில் உள்ள நபர்களின் பெயரில் தான் ஏற்பட்டிருக்கும், ஆனால் மேற்சொன்ன ஆவணம் வழக்கிற்காக நான் தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யபட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவாசொத்தில் நான் வசிக்கவில்லை, அதனால்தான் நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, அதனால்தான் எனது

சாட்சியமும் ஆவணமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. வாதி சொத்திற்கு அருகில் பைப்லைன் செல்லுமிடத்தில் தான் நான் வேலி போட முயற்சித்தேன் என்றால் சரியல்ல. பைப்லைன் வாதியின் வீட்டிற்கு பின்புறம் தான் உள்ளது. நான் பைப்லைனை உடைத்து தகராறு செய்ததால்தான் ஏற்கனவே மாவட்ட ஆட்சியர் அலுவலக விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.